தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# தமிழ்மொழி

## மதிப்பீட்டுத் தாள் 2023 – 2024

## வளர்தமிழ் 10

சுட்டெண்: | | | | | | | | | |

நேரம்: 180 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

www.tamiledc.com

# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

## 1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.

1. பண்டைத்தமிழரின் வீரம் பற்றிக் கூறும் நூல்

அ) அகநானூறு ☐ ஆ) புறநானூறு ☐

இ) பழமொழிநானூறு ☐ ஈ) பரிபாடல் ☐

2. கேட்போரைத் தன் மொழியினால் கட்டிப் போடும் ஆற்றல் மிக்க ஊடகம்

அ) கைத்தொலைபேசி ☐ ஆ) தொலைபேசி ☐

இ) வானொலி ☐ ஈ) செய்தித்தாள் ☐

3. ‘‘தண்டலை மயில்களாட’’ என்ற பாடலில் கம்பருக்கு ஆடல் அரங்காகத் தோன்றிய நிலம்

அ) குறிஞ்சி ☐ ஆ) நெய்தல் ☐

இ) முல்லை ☐ ஈ) மருதம் ☐

4. மொழிக்கு முதலில் வரும் எழுத்துகளின் எண்ணிக்கை

அ) நூற்றுநாற்பத்தேழு ☐ ஆ) பன்னிரண்டு ☐

இ) எழுபத்திரண்டு ☐ ஈ) நூறு ☐

5. துயில் என்பது

அ) இடை ☐ ஆ) உறக்கம் ☐

இ) பக்கம் ☐ ஈ) குளிர் ☐

6. ந.சி.கந்தையா பிறந்த ஊர்

அ) மட்டக்களப்பு ☐ ஆ) மானிப்பாய் ☐

இ) கந்தரோடை ☐ ஈ) பூநகரி ☐

7. இன்று காலநிலை கடுங்குளிராக இருக்கிறது. இச் சொல்லியம்

அ) கூற்றுச்சொல்லியம் ☐ ஆ) வினாச்சொல்லியம் ☐

இ) கூட்டுச்சொல்லியம் ☐ ஈ) வியங்கோட்சொல்லியம் ☐

8. கடைசிக் கடற்கோள் நிகழ்ந்த போது ஆற்றிடைக் குறையாக இருந்த ______________ தனித்தீவாகப் பிரிந்தது.

அ) இந்தியா ☐ ஆ) இலங்கை ☐

இ) ஐரோப்பா ☐ ஈ) அமெரிக்கா ☐

9. நீயோ, புலவரோ என்ற சொற்கள் குறிப்பது

அ) அகச்சுட்டை ☐ ஆ) அகவினாவை ☐

இ) புறவினாவை ☐ ஈ) புறச்சுட்டை ☐

10. பழனம்,செய்,கழனி என்பவற்றைக் குறிக்கும் சொல்

அ) வயல் ☐ ஆ) காடு ☐

இ) கடல் ☐ ஈ) நிலம் ☐

11. கலங்கரை விளக்கம் போல இது

அ) உவமை அணி ☐ ஆ) உவமைத்தொடர் ☐

இ) அடுக்கிடுக்குத்தொடர் ☐ ஈ) இணைமொழி ☐

12. குமரிக்கண்டத்தில் ஓடிய ஆறுகள்

அ) குமரி, வைகை ☐ ஆ) பஃறுளி, காவிரி ☐

இ) குமரி, பஃறுளி ☐ ஈ) காவிரி, வைகை ☐

13. மெய்யெழுத்துகள் ஒலி அடிப்படையில் ____________ வகைப்படும்.

அ) 18 ☐ ஆ) 3 ☐

இ) 12 ☐ ஈ ) 6 ☐

14. இசைக்குலப் பெண்களை ____________ என அழைப்பர்.

அ) பாடினி ☐ ஆ) விறலியர் ☐

இ) கூத்தர் ☐ ஈ ) பாணர் ☐

15. பாவலர் முடியரசன் பாடிய பாடல்

அ) தென்றலெனும் தொட்டிலிலே ☐ ஆ) தண்டலை மயில்களாட ☐

இ) பூவார் சோலை மயிலால ☐ ஈ ) காலை இளம் பரிதியிலே ☐

16. தனிமொழிகள் பல தொடர்ந்து நின்று பொருள் தருவது

அ) பொதுமொழி ☐ ஆ) தொடர்மொழி ☐

இ) அடைமொழி ☐ ஈ ) நிலைமொழி ☐

17. குமரிக்கண்டத்தின் மேற்கிலிருந்த மலைத்தொடரின் பெயர்

அ) மேருமலை ☐ ஆ) விந்தியமலை ☐

இ) இமயமலை ☐ ஈ ) குமரிமலை ☐

18. இருந்தனன் என்பதன் சரியான பகுப்பு

அ) இரு+ த்(ந்)+ த்+அன்+அன் ☐ ஆ) இரு+ ந்+ த்+அன்+அன் ☐

இ) இரு+த்+அன்+அன் ☐ ஈ ) இரு+த்+த் +அன்+அன் ☐

19. ஒரே எழுவாயில் பல சொல்லியங்கள் தொடரும் இடங்களில் வரும் நிறுத்தற் குறியீடு

அ) முக்காற்புள்ளி ☐ ஆ) முற்றுப்புள்ளி ☐
இ) அரைப்புள்ளி ☐ ஈ ) காற்புள்ளி ☐

20. இலக்கிய இலக்கணச் சான்றுகளோடு தமிழ்மொழியின் தனித்தன்மையை உலகுக்கு உணர்த்தியவர்

அ) தேவநேயப்பாவாணர் ☐ ஆ) தனிநாயகம்அடிகளார் ☐
இ) பாவேந்தர் ☐ ஈ ) பாரதியார் ☐

21. அக்கா வற்றல் உண்டாள். இது

அ) பொருளாகுபெயர் ☐ ஆ) தொழிலாகுபெயர் ☐
இ) காலவாகுபெயர் ☐ ஈ ) இடவாகுபெயர் ☐

22. வன்னியாள் என்பது

அ) தெரிநிலைவினை ☐ ஆ) குறிப்புவினை ☐
இ) எதிர்மறைவினை ☐ ஈ ) வினைமுற்று ☐

23. உருவக அணிக்கு எடுத்துக்காட்டு

அ) தேன்மொழி ☐ ஆ) தேன் போன்ற மொழி ☐
இ) மொழித்தேன் ☐ ஈ ) இனியமொழி ☐

24. தளிர் அன்ன கை இதில் வரும் உவமேயம்

அ) கை ☐ ஆ) தளிர் ☐
இ) மென்மை ☐ ஈ ) இனிமை ☐

25. கழகம் அமைத்துத் தமிழை வளர்த்தவர்கள்

அ) பல்லவர் ☐ ஆ) சோழர் ☐

இ) பாண்டியர் ☐ ஈ ) சேரர் ☐

26. க்,ச்,ப் என்ற வல்லின மெய்யெழுத்துகளின் இன எழுத்துகள்

அ) ங் ஞ் ம் ☐ ஆ) ந் ம் ன் ☐

இ) ன் ங் ம் ☐ ஈ ) ஞ் ங் ண் ☐

27.பின்வருவனவற்றுள் நெட்டெழுத்து அல்லாதது

அ) ஔ ☐ ஆ) மே ☐

இ) பூ ☐ ஈ ) இ ☐

28. செங்குட்டுவன் மலைவளம் காணச் சென்ற காலம்

அ) கோடைகாலம் ☐ ஆ) இளவேனிற்காலம் ☐

இ) குளிர்காலம் ☐ ஈ ) கார்காலம் ☐

29. செவ்வந்தி சிரித்தாள். என்பது

அ) இரண்டாம் வேற்றுமைச்சொல்லியம் ☐

ஆ) ஆறாம் வேற்றுமைச்சொல்லியம் ☐

இ) முதலாம் வேற்றுமைச்சொல்லியம் ☐

ஈ ) மூன்றாம் வேற்றுமைச்சொல்லியம் ☐

30. பொன் + ஒளி

அ) பொன்னொளி ☐ ஆ) பொற்றொளி ☐

இ) பொன்ஒளி ☐ ஈ ) பொற்ஒளி ☐

புள்ளிகள் 30

## 2) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

வீட்டுக்கு வரும் விருந்தினரை முகமலர்ச்சியோடு வரவேற்று உண்ண உணவும் இருக்க இடமும் கொடுத்து அன்பு காட்டுவதே விருந்தோம்பல் ஆகும். விருந்தினர் என்றால் உறவினர் என்று இக்காலத்தினர் கருதுகின்றனர். உறவினர் வேறு விருந்தினர் வேறு, முன்பின் அறியாத புதியவர்களுக்கே விருந்தினர் என்று பெயர். திருவள்ளுவர் விருந்தோம்பலின் சிறப்பை வலியுறுத்தி ஓர் அதிகாரத்தையே அமைத்துள்ளார். இதில் இல்லறம் புரிவது விருந்தோம்பல் செய்யும் பொருட்டே என்கிறார். நாம் முகத்தில் சிறிது மாறுபாடு காட்டினாலே விருந்தினரின் உள்ளம் அனிச்சம் பூப்போல வாடிவிடும். எனவே, நாம் முகமலர்ச்சியோடு விருந்தினரை வரவேற்க வேண்டும் என்பதை ''மோப்பக் குழையும் அனிச்சம்''என்ற குறளில் எடுத்துரைக்கிறார். விருந்தினரைப் போற்றுதல் இல்லறக் கடமைகளில் ஒன்று என்பதையும் இவ்வதிகாரத்தில் குறிப்பிட்டுள்ளார். கோவலன் கண்ணகியை விட்டுப் பிரிந்திருந்த காலத்தில் இல்லறத்தார் செய்ய வேண்டிய கடமைகளில் ஒன்றான விருந்தோம்பலைச் செய்யமுடியவில்லையே என அவள் வருந்தியதாக சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் கூறியுள்ளார்.

1. நாம் எவ்வாறு விருந்தினரை வரவேற்க வேண்டும்?

______________________________________________

______________________________________________

2. இல்லறத்தார் செய்ய வேண்டிய கடமைகளில் ஒன்றான விருந்தோம்பலைச் செய்ய முடியவில்லையே என வருந்தியவர் யார்?

______________________________________________

______________________________________________

3. விருந்தினர் உள்ளம் எதற்கு ஒப்பிடப்படுகிறது?

______________________________________________

______________________________________________

4. எப்போது விருந்தினர் உள்ளம் வாடிவிடும் எனக் கூறப்படுகிறது?

______________________________________________

______________________________________________

5. இப்பந்தியிலிருந்து நீர் விளங்கிக் கொள்வது யாது?

______________________________________________

______________________________________________

புள்ளிகள் 10

## 3) பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.

1. குமரிக்கண்டம் பற்றிய செய்திகளைக் கூறும் பண்டைத் தமிழ் இலக்கியங்கள் இரண்டு தருக.

______________________________

2. தேவநேயப்பாவாணருக்கு வழங்கப்பட்ட பட்டங்கள் எவை?

______________________________

3. இந்தியா முழுவதும் தமிழ்நாடாக இருந்தபொழுது எவ்வாறு அழைக்கப்பட்டது?

______________________________

4. மணிப்பவள நடை என்றால் என்ன?

______________________________

5. சேரன் செங்குட்டுவனது வடதிசைச் செலவு பற்றி எங்கே பறை அறையப்பட்டது?

______________________________

6. சுவாமி வேதாசலம் தனது பெயரை, தமிழில் எவ்வாறு மாற்றிக் கொண்டார்?

______________________________

7. சொற்பொருள் தருக.

படிமம் ______________________________

மகரயாழ் ______________________________

புள்ளிகள் 10

**4. பின்வரும் கவிதைத் தலைப்புகளுள் ஒன்றினைத் தெரிவு செய்து எட்டு வரிகளுக்குக் குறையாமல் கவிதை எழுதுக.**

1. மலர்

2. ஆசிரியர்

புள்ளிகள் 10

## 5) அ) பந்தியை வாசித்து இலக்கண வினாக்களுக்கு விடை எழுதுக.

மலையும் சோலையும் சூழ்ந்த ஓர் அழகிய சிற்றூர். அங்கே பசுமையான வயல்கள் நிறைந்திருந்தன. உழவர்கள் சுறுசுறுப்பாக வேலை செய்து கொண்டிருந்தனர். பசி என்றால் என்ன என்பதை அறியாத ஊர் மகிழ்ச்சியில் திளைத்திருந்தது. ஒரு முறை கடுமையான வரட்சி ஏற்பட்டது. வறுமை அவ்வூரை வாட்டியது. ஒரு நாள் மாலைப்பொழுது வானத்தில் கருமுகில்கள் திரண்டன. மழை பெய்வதற்கான அறிகுறியாகக் குளிர்காற்று வீசியது. சிறிது நேரத்தில் பெருமழை பெய்யத் தொடங்கியது. பெய்த மழையால் பயிர்கள் செழித்து வளரும், விளைச்சல் பெருகும் என மக்கள் மகிழ்ந்தனர்.

1. இங்கு வந்துள்ள ஆகுபெயர் எவ்வகை என கண்டறிந்து எழுதுக.

_______________________________________________

2. செயப்படுபொருள் குன்றிய வினைச்சொல் ஒன்று தருக.

_______________________________________________

3. எதிர்மறைப்பெயரெச்சம், ஒன்று தருக.

_______________________________________________

4. தொழிற்பெயருக்கு எடுத்துக்காட்டு ஒன்று தருக.

_______________________________________________

5. பெயர்ப்பகாச்சொல் ஒன்று எழுதுக.

_______________________________________________

புள்ளிகள் 10

**ஆ) 1. பின்வருவனவற்றுக்கு எடுத்துக்காட்டுத் தருக.**

1. ஓர் எழுத்துச் சொல் ______________________
2. காரணப்பெயர் ______________________
3. பொதுமொழி ______________________

| புள்ளிகள் 03 |
|---|

**2. தரப்பட்டிருக்கும் சொல்லியங்களில் உள்ள வினையாலணையும் பெயர்களை எழுதுக.**

1. வெற்றி பெற்றவன் வருகிறான். ______________________
2. கற்றவரைக் கண்டு மகிழ்ந்தேன். ______________________

| புள்ளிகள் 02 |
|---|

6) **தரப்பட்டுள்ள சொற்குவியலில் இருந்து கருத்துக்குப் பொருத்தமான பழமொழிகளைக் கண்டறிந்து எழுதுக.**

| | | | |
|---|---|---|---|
| ஏழை | பெரிது | உண்மை | மட்டும் |
| சுடுகாடு | கெட்டவரில்லை | கடுகு | பழக்கம் |
| அழுத | கூரிய | ஒக்கும் | சிறிது |
| கண்ணீர் | சிறு | பறந்தாலும் | சொல்லிக் |
| தொட்டிலிற் | துளி | காரம் | வாளை |
| பெருவெள்ளம் | | | |

1. பழக்கத்தின் வலிமை.

______________________________

2. உண்மையின் உயர்வு.

______________________________

3. உருவைக் கண்டு எடை போடாதே.

______________________________

4. ஏழ்மையின் வலிமை.

______________________________

5. தேட்டத்தின் பெருமை.

______________________________

புள்ளிகள் 05

**7) பந்தியை உமது வாழிடமொழியில் மாற்றி எழுதுக.**

கடல், இயற்கை எமக்கு அளித்த மிகப்பெருங் கொடையாகும். கடலால் நாம் பல பயன்களைப் பெறுகின்றோம். மீன், இறால் போன்றவற்றை நாம் கடலில் இருந்தே பெறுகின்றோம். இக்கடலுணவுகள் எங்கள் உடலுக்குத் தேவையான ஊட்டச்சத்தைத் தருகின்றன. எமது உணவுக்குத் தேவையான உப்பு கடலில் இருந்தே கிடைக்கிறது. இவ்வாறு கடலானது மக்கள் வாழ்க்கையில் இன்றியமையாத இடத்தைப் பிடித்திருக்கிறது.

__________________________________________________________________________________

__________________________________________________________________________________

__________________________________________________________________________________

__________________________________________________________________________________

__________________________________________________________________________________

__________________________________________________________________________________

__________________________________________________________________________________

புள்ளிகள் 05

8) **தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 200 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- ஊடகங்களில் தமிழ்
- கடல் கொண்ட தமிழகம்
- உண்மை நட்பு
- எனது தாயகம்

புள்ளிகள் 15